**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 150/2020 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 1 |
| Name | : | ஆஷா, வயது 24 |
| Father Name/Husband Name | : | பால்ராஜ் |
| Village | : | மேட்டமலை |
| Taluk | : | சாத்தூர் |
| Calling | : | நகை கடையில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of June 2022.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேட்டமலையில் வசிக்கிறேன். நகை கடையில் வேலை செய்கிறேன். எதிரியை சம்பவத்தன்று நான் பார்த்தேன். எதிரி ஆஜர் இல்லை பார்த்தால் அடையாளம் தெரியும். கடந்த 14.08.2019 ஆம் தேதி மதியம் 02.45 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது அப்பா ஒரு பத்திரத்தை எடுத்து வரச்சொல்லி போன் செய்து சொன்ன போது நானும் எனது தங்கையும் Scooty ல் பத்திரத்தை எடுத்துக்கொண்டு போய் கொடுத்தோம். பின்னர் அப்பா வேலையை முடித்துவிட்டு ஆரக்குளத்தில் இருந்து மேட்டமலைக்கு எனது அப்பா எங்களுக்கு முன்னால் போனார் நாங்கள் பின்னால் வந்து கொண்டிருந்தோம். அப்போது செண்பகபேரி விலக்கு அருகே எதிரே வந்த TATA Max என்ற வண்டி ரோட்டில் வந்த ஒரு ஆட்டோவை முந்த வேண்டும் என்பதற்காக அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து எனது அப்பா ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. அதில் எனது அப்பா தூக்கி எறியப்பட்டார். நாங்கள் சென்று பார்த்த போது எனது அப்பாவிற்கு தலையில் கை கால் அடிப்பட்டிருந்தது. தலையில் மூளை சிதறி இருந்தது. பின்னர் ஆம்புலன்சிற்கு போன் செய்து அப்பாவை அனுப்பிவிட்டு நான் எனது தங்கையுடன் நாலாட்டின்புதூர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ளகையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சம்பவம் நடந்த அன்று காமநாயக்கன்பட்டி கோவில் திருவிழா என்றால் சரிதான். கோவில் திருவிழா என்பதால் அந்த சாலையில் மக்கள் கூட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவதன்றும் கூட்டம் அதிகம் இருந்தது என்றால் இல்லை. சம்பவத்தன்று வீட்டில் இருந்து நகைகடைக்கு எத்தனை மணிக்கு வேலைக்கு போனீர்கள் என்றால் 09.15 மணிக்குபோய்விட்டேன். நீங்கள் தான் கடையை திறந்தீர்கள் என்றால் உரிமையாளர் திறந்துவிட்டார். நீங்கள் வேலை பார்க்கும் கடையில் இருந்து தெற்கு ஆரைக்குளம் சுமார் 45 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் ஒன்றரை மணிநேரம் ஆகும் எத்தனை கி.மீ என்று

தெரியாது. உங்கள் தங்கை கடைக்கு வரும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 09.25 இருக்கும். சம்பவம் நடந்த அன்று பத்திர பதிவு செய்ய அசல் பத்திரம் வேண்டும் என்று உங்கள் அப்பா கேட்டார் என்பதாக புகாரில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு பத்திர பதிவு அலுவலகம் ஓட்டபிடாரத்தில் உள்ளது என்றால் சரிதான். பத்திர பதிவு அலுவலகத்தில் வேலை முடித்து வரும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 01.15 மணிஇருக்கும். ஓட்டபிடாரத்தில் இருந்து ஆரைக்குளம் வர சுமார் அரை மணிநேரம் ஆகும் என்றால் சரிதான். நீங்கள் வீட்டை விட்டு கிளம்பும் போது 02.30 மணி இருக்கும் என்றால் சரிதான். உங்கள் வீட்டிற்கும் தெற்கு ஆரைக்குளம் கிராமத்திற்கும் சுமார் 30 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். உங்கள் ஊரில் இருந்து கோவில்பட்டி வர வேண்டும் என்றால் ஒரு மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். உங்கள் அப்பாவிற்கு வாகனம் ஓட்ட உரிமம் கிடையாது என்றால் சரிதான். உங்கள் அப்பாவிற்கு மது அருந்து பழக்கம் உண்டு என்றால் இல்லை. நீங்கள் கொடுத்த புகாரில் சம்பவ இடத்தில் வேறு யாரும் இருந்ததாகவோ எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாகவோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலிசார் சொல்லி தான் எதிரியின் பெயர் விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். புகாரில் துரைச்சாமிபுரம் பஸ் நிறுத்ததின் முன்பு வைத்து தான் சம்பவம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். துரைச்சாமிபுரம் பஸ் நிறுத்ததிற்கு வடக்கே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். அந்த வேகத்தடையை கடக்கும் வாகனங்கள் நின்று தான் வரும் என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடத்திற்கு பத்து நிமிடத்தில் வந்திருப்பார்கள் என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்ன நடந்தது என்று கேட்டார்கள் என்றால் சரிதான். போலிசார் எழுதிய பேப்பரில் தான் நீங்கள் கையெழுத்து போட்டீர்கள் என்றால் இல்லை நானே எழுதி நான் கையொழுத்து போட்டேன். நீங்கள் சொல்வது போல் சொன்ன விதத்தில் உங்கள் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்வதும் புகார் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. சம்பவ சமயம் கோவில் திருவிழா என்பதால் நிறைய வாகனங்கள் சென்றது என்றாலும் அதில் இனம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. உங்கள் அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அவரது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. உங்கள் அப்பா இறந்ததற்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.